Registered as a Newspaper

COMPUTER PROGRAMMING COBOL LANGUAGE
குறிப்பிட்ட மாணவர் அனுமதிக்கப்படுவர்,
எமது நிறுவனத்தில் மட்டுமே COBOL LANGUAGE பயிற்றுவிக்கப்படுகிறது.
Basic படித்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்
ஆரம்பம்: 22-3 86
காலை 9 மணி
JAFFNA Technical Institute.
52/1, Stanley Road, JAFFNA

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1/=

தொழிற் பயிற்சி
RADIO, T.V. DECK REPAIRING, ELECTRICAL WIRING, WINDING.
வகுப்புகள்
ஆரம்பம்: 22 - 3 - 86
காலை 9 மணி
JAFFNA TECHNICAL INSTITUTE
52/1, Stanley Road, JAFFNA.

மடர் - 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு பங்குனி மீ 5 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 6 (18-03-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:103

## கிளிநொச்சியில்
# சடலங்கள் பல தேங்கிக்கிடந்து ஆஸ்பத்திரி நாற்றம்!

## பிரேதபரிசோதனை செய்ய டாக்டர் எவருமில்லாத அவலம்

– கிளிநொச்சி மாவட்டச் செய்தியாளர் –

கிளிநொச்சி, மார்ச் 18

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க ஆஸ்பத்திரி கடந்த இரண்டு மூன்று தினங்களாக நாற்றம் எடுக்கிறது.

இறந்தவர்களின் சடலங்களைப் பிரேத பரிசோதனை செய்து உறவினர்களிடம் ஒப்படைக்க முடியாத நிலை. அதனால் அவை தேங்கிக் கிடந்து நாறுகின்றன.

பிரேத பரிசோதனை செய்வதற்கு எம். பி. பி. எஸ் டாக்டர் எவரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இல்லை. அதனாலேயே இந்த அவலம் ஏற்பட்டிருக்கிறது.

நேற்றுவரை பதினொரு சடலங்கள் பிரேத பரிசோதனை செய்யப்படாமல் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் தேங்கிக் கிடந்து நாறின.

இவற்றில் ஒன்பது, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானோரின் சடலங்கள். மற்ற இரண்டும் பரந்தன் ரயில் விபத்தில் மரணமானவர்களின் சடலங்கள்.

பரந்தனில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொலையுண்ட ஒருவரின் சடலம் புழுப்பிடித்த நிலையில் கிடந்து நாற்றம் எடுக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பெரிய அரசாங்க ஆஸ்பத்திரி நகரத்தில் இருக்கும் ஆஸ்பத்திரி தான்.

ஆனால் இங்கு எம் பி. பி.எஸ் டாக்டர்கள் எவரும் இப்போது சேவையில் இல்லை. இருந்த ஒருவர் ஜனவரியுடன் இடமாற்றலாகிப் போய்விட்டார். அவரது இடத்திற்கு எவரும் வரவில்லை.

அரசாங்க ஆஸ்பத்திரி ஒன்றில் ஆகக் குறைந்தது இரண்டு எம்.பி. பி.எஸ். டாக்டர்களாவது தேவையாம். அப்போதுதான் சடலம் பரிசோதனை செய்து அத்தாட்சிப் பத்திரம் வழங்கி அவற்றை உறவினர்களிடம் ஒப்படைக்க வசதியாக இருக்கும்.

கிளிநொச்சி ஆஸ்பத்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

### இப்படியும் நடந்தது

கிளிநொச்சி, மார்ச் 18

சடலத்தைப் பொறுப்பு எடுக்க வந்தவர்களுக்கு அலைச்சல் பொறுக்க முடியவில்லை.

கொண்டு வந்த பிரேதப் பெட்டியைத் தூக்கி எறிந்து விட்டு வீடு திரும்பினார்கள் அவர்கள்.

அந்தச் சடலம் கிளிநொச்சி ஆஸ்பத்திரி சவச்சாலையில் அழுகிய நிலையில் கிடக்கிறது.

மார்ச் 14 இல் பரந்தனில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்த வெள்ளைச்சாமி தினகரநாதன் என்பவரின் சடலத்துக்கே இந்தக் கதி ஏற்பட்டுள்ளது.

சடலத்தைப் பரிசோதனை செய்ய சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிகளிடம் இருந்து டாக்டர்களைக் கூட்டி வர முயற்சித்து அலுத்துப் போன நிலையில் தான் உறவினர்கள் பிரேதப் பெட்டியைத் தூக்கி எறிந்து விட்டுச் சென்றனராம்.

### சுபநேரம்

18- 3- 1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10.49 முதல் 12.19 வரை

ராகுகாலம்:
3.19 முதல் 4.49 வரை

## கட்டுநாயக்கா
# விமான நிலையத்தில் விசேஷ கொமாண்டோ

### விமானக் கடத்தலை முறியடிக்கவாம்

கொழும்பு, மார்ச் 18

விமானக் கடத்தலைத் தடுக்கும் விசேட பயிற்சி பெற்ற கொமாண்டோக்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

விமானங்களைக் கடத்துவது, பயணிகள் பணயக் கைதிகளாக வைப்பது போன்ற செயல்களை முறியடிப்பதில் இக் கொமாண்டோக்கள் வெளிநாட்டுப் பயிற்சி பெற்றவர்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

இக் கொமாண்டோக்களின் ஒத்திகை ஒன்று நேற்று கனேமுல்ல முகாமில் நடத்தப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, ராணுவத்தளபதி நளின் செனவிரத்தின ஆகியோர் ஒத்திகையைப் பார்வை இட்டனர்.



யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் முன்னால் மறியல் போராட்டம் நேற்று ஆரம்பமானது.

யாழ். நகரில் உள்ள மக்கள் வங்கி அலுவலகம் ஒன்று பூட்டப்பட்டிருப்பதையும், மறியல் போராட்டம் செய்தவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

# மறியல் போர் தொடரும்

## வங்கி உறுதிமொழியை நம்ப தயாராக இல்லை என அறிவிப்பு

நல்லூர், மார்ச் 18

நேற்று திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்பட்ட நகை அடகு வைத்தோர் சங்கத்தின் மறியல் போராட்டம், நகைகள் அந்தந்த இடங்களில் வைத்து திருப்பி கையளிக்கப்படும் வரை தொடர்ந்து நடைபெறும் என்று நகை அடகு வைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக சங்கம் விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு :-

வங்கி நிர்வாகத்தினால் முன் வைக்கப்படும் எந்த ஓர் உறுதிமொழியையும் இனி வாடிக்கையாளர்கள் நம்பத் தயாராக இல்லை.

சங்கத்தின் மறு அறிவித்தல் வரும்வரை அலட்சியம் செய்யாமலும் சோர்வடையாமலும் சகல வாடிக்கையாளர்களையும் மறியல் போராட்டத்தில் கலந்து கொள்ளும்படியும் சங்கம் கேட்டுள்ளது.

இப்போராட்டத்திற்கு பொதுஸ்தாபனங்களும் தோள்கொடுத்து உதவ வேண்டும்—இப்படி அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

## காவலூரில்
# கடற்கண்ணி வெடி!

### ஷெல் தாக்குதலினால் 2 பெண்கள் காயம்

– ஊர்காவற்றுறை செய்தியாளரும், அலுவலகச் செய்தியாளரும் –

ஊர்காவற்றுறை, மார்ச், 18

ஊர்காவற்றுறை கடற்கோட்டைக்குச் சமீபமாக உள்ள கடற்பகுதியில் நேற்று நண்பகல் கடற்கண்ணி ஒன்று வெடித்தது.

கடற்படையினர் ரோந்துக் கப்பல் ஒன்றுக்கு குறிபார்த்தே கடற்கண்ணி வைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

கடற்கண்ணி வெடித்ததால் ஏற்பட்ட சேதம் அல்லது உயிர்ச் சேதம் பற்றிய விவரம் எதுவும் உடனடியாகக் கிடைக்கவில்லை.

கண்ணிவெடி வெடித்ததும் முகாமில் இருந்த கடற்படையினர் ஊர்காவற்றுறை, காரைநகர் பக்கங்களை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். ஊர்காவற்றுறைப் பக்கமிருந்து போராளிகளும் எதிர்த்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 5 முஸ்லிம்கள் சுட்டுக் கொலை

### சடலங்கள் எரிக்கப்பட்டனவா?

திருகோணமலை, மார்ச் 18

மூதூர், மல்லிகைத் தீவுச் சந்தியில் 5 முஸ்லிம் நபர்கள் கடந்த ஞாயிறு மாலை துப்பாக்கிக் குண்டு தாக்கி இறந்தார்கள்.

பின்னர் அந்த இடத்திலேயே அவர்களின் சடலங்கள் எரிக்கப்பட்டனவாம்.

மரண விசாரணை நடத்த மூதூர் பதில் நீதிவான் திரு. எம் கே செல்லராசா மல்லிகைத் தீவுக்குச் சென்றார்.

சம்பவம் நடந்த இடத்தில் சடலங்களைக் காணவில்லை. இதைத் தொடர்ந்து மரண விசாரணையை நடத்தாமலே பதில் நீதிவான் திரு. செல்லராசா திரும்பினார்.

சிறுடையினர் இந்த முஸ்லிம்களை சுட்டதாகக் கூறப்படுகிறது.

### முச்சந்தி முனி



அட, அடே! யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு இன்னமும் இருக்குதே! நான் அதுவென்னை கதையே முடிஞ்சுது என்டெல்லோ நினைச்சுக் கொண்டிருக்கிறன்.

## நாவற்குழி
# முகாமிலிருந்து சூடு! சிறுவன் பலி!!

கைதடி, மார்ச் 18

14 வயதான கதிர்காமநாதன் பாலமுருகன் நாவற்குழியில் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானான்.

இறந்த சிறுவன் அரியாலை மணியன் தோட்டம் வாசி. பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலையில் பணி புரிந்து வந்தான்.

நேற்றுக் காலை 6.45 மணியளவில் வேலைக்கு வந்தபோது தொழிற்சாலை முன்றலில் வைத்து நாவற்குழி முகாமில் இருந்து வந்த துப்பாக்கிச் சூடு சிறுவனைத் தாக்கியது.

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அருகில் தான் நாவற்குழி ஆயுதப்படை முகாம் இருக்கிறது.

துப்பாக்கிச் சூடு தாக்கி தமையன் இறந்ததைக் கேள்விப்பட்ட 13 வயது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின்
# அழைப்பை நிராகரித்தது யாழ். பிரசைகள் குழு

யாழ்ப்பாணம், மார்ச் 18

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுத்த அழைப்பை யாழ் பிரசைகள் குழு நிராகரித்து விட்டது.

ஜனவரி 4, 5-ஆம் திகதிகளில் யாழ்.நகரில் நடந்த சம்பவங்களைப் பற்றி கொழும்பில் நடத்தப்படும் விசாரணையில் கலந்துகொள்ளும்படி விடுத்த அழைப்பே நிராகரிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழு முன் வந்து சாட்சியம் அளித்து நேரத்தை வீணாக்க விரும்பவில்லை அப்படி சாட்சியம் அளிப்பதன் மூலம் எதுவித பிரயோசனமும் ஏற்படப் போவதும் இல்லை.—

இப்படி யாழ்ப்பாணம் பிரசைகள் குழு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு திட்டவட்டமாக அறிவித்து விட்டது.

ஜனவரி சம்பவங்கள் குறித்த கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விசாரணை நடத்தப்படும். சாட்சியம் அளிப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும். கொழும்புக்கு வாருங்கள்–இப்படி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மூன்று தடவைகள் யாழ்.பிரசைகள் குழுவுக்கு அழைப்புக்கு மேல் அழைப்பு விடுத்தது.

இந்த அழைப்புக்களை நிராகரித்து யாழ். பிரசைகள் குழு, கண்காணிப்புக் குழுவுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வொய்ஸ் — ஒவ் — அமெரிக்கா
# அமெரிக்காவுடன் இலங்கை லடாய்!

கொழும்பு மார்ச் 18

இலங்கையில் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" (வி ஓ. ஏ.) நிறுவனத்தின் பிராந்திய அஞ்சல் நிலையத்தை நிறுவுவதில் பெருந் தடங்கலும் சிக்கலும் உருவாகி உள்ளன. அதனால் இரு சாராருக்கும் இடையில் பெரும் லடாய் ஏற்பட்டிருக்கிறது.

பிராந்திய நிலையத்தை நிறுவுவதற்கென வடமேற்கு மாகாணத்தில் ஒதுக்கப்பட்ட நிலத்தில் சிங்களக் குடும்பங்கள் பல குடியேறி வாழ்கின்றன.

அவர்களை அவ்விடத்தை விட்டு வெளியேற்றி "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா"வுக்கு இடம்கொடுக்க இலங்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நகைகளை கொழும்பில் வழங்கும் திட்டம் ரத்து

### மக்கள் வங்கி நிர்வாகம் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச். 18

மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகள் முன்னர் அறிவிக்கப்பட்டவாறு கொழும்பில் திரும்பக் கொடுக்கப்பட மாட்டாது என உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபிராந்தியமுகாமையாளர் விடுத்த அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கை விவரம் வருமாறு:–

அடகு வைத்தோர் சங்கம் யாழ்ப்பாணத்திலேயே நகைகள் வழங்கப்படல் வேண்டும் என்று ஒருமனதாகக் கோரி மறியல் போராட்டம் ஆரம்பித்துள்ளமையாலும் போக்குவரத்து இடைஞ்சல் காரணமாகவும் பொதுமக்களின் நன்மை கருதியும் ஏற்கனவே அறிவித்தபடி கொழும்பில் நகைகள் வழங்கப்படமாட்டாது.

யாழ்ப்பாணத்தில் வைத்து நகைகளை வழங்குவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே மக்களின் நலன் கருதி மறியல் போராட்டத்தைக் கைவிடும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.– இவ்வாறு அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

# யாழ் - கொழும்பு லொறி சேவை ஸ்தம்பிக்கும் அபாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ் – கொழும்பு லொறி போக்குவரத்து சேவை இன்று முதல் ஸ்தம்பிக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியம் நேற்று அவசர அவசரமாக எடுத்த முடிவு ஒன்றினாலேயே இந்த நிலை உருவாகியிருக்கிறது

சுல்தான் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான லொறி ஒன்று நேற்றுக் காலை கனகராயன்குளம் பகுதியில் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பொருள்களை திருப்பி ஒப்படைக்கும் வரை போக்குவரத்துச் சேவையை இடை நிறுத்துவது என முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியம் நேற்று இரவு முடிவு செய்தது.

கொள்ளைப் பொருள்களைக் கடத்துவதற்கு ஈ எல். எவ். 350 நீல நிற ட்ரக் ஒன்று பாவிக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குமரி அனந்தன் சொல்கிறார்

சென்னை, மார்ச் 17

இலங்கை அமைச்சர் அத்துலத்முதலியின் போர்நிறுத்தத் திட்டம் ஓர் ஏமாற்று நடவடிக்கை இதனை நம்பாமல் இந்தியராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி தமிழ் மக்களை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

இப்படி தமிழ்நாடு காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் சொன்னார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘மைதிலி என்னைக் காதலி’ சங்கீதா இப்பொழுது ‘பிஸி’

‘‘மைதிலி என்னைக் காதலி’’ படத்தில் அறிமுகமானவர் சங்கீதா. நடிகை அம்பிகாவின் சாயலைக் கொண்டவர் அவர்.

‘‘மைதிலி என்னைக் காதலி’’ யில் நடித்ததைத் தொடர்ந்து அவருக்கு பல சான்ஸ்கள் வந்து குவிந்து கொண்டு இருக்கின்றனவாம்.

அவர் சொல்கிறார்: எனக்கு சினிமாவில் நடிக்கும் எண்ணமே இருக்கவில்லை. நடிகையாக வேண்டும் என்று நினைத்திருந்தால் எப்போதோ படத்தில் தோன்றியிருப்பேன்.

ஏனென்றால் சினிமாத்துறையில் அந்தளவுக்கு எங்கள் குடும்பத்துக்கு செல்வாக்கு உண்டு. கே பாலாஜி அவர்களைச் சில வருடங்களாகத் தெரியும். பாலாஜி கூட என்னை ஒருமுறை நடிக்க அழைத்தார். அப்போது படித்துக் கொண்டிருந்ததால் நடிக்க நான் விரும்பவில்லை.

பின்னர் ராஜேந்தர் சார் வந்து கேட்ட போது ஒப்புக்கொண்டேன். அவர் படத்தில் நடிப்பதே ஒரு பாக்கியமாயிற்றே!

கெமரா முன் முதன் முதலாக நின்றபோது புல்லரித்து சின்ன வயதில் இருந்தே என் பள்ளியின் முன் வைக்கப்படும் பேனர்களைப் பார்த்து வியந்துவேன்.

அதேபோல எமக்கும் பேனர் வைக்கப்படும். இலட்சக் கணக்கான ரசிகர்கள் என்னையும் பாராட்டுவார்கள்! எல்லாம் சினிமாவில் நடிப்பதால் தானே என்று எண்ணி அந்த முதல் காட்சியிலேயே பூரித்துப் போனேன்.

நதியா எனக்கு மிகவும் நெருக்கமானவர். எனது அம்மாவும், நதியாவின் அப்பாவும் ஒன்றாகப் படித்தவர்கள் அவர் நடித்த படங்களைப் பார்த்து விமர்சிப்பேன் அவரும் என்னை உற்சாகப் படுத்துவார்.

நடிகை ஜெயஸ்ரீ என் பால்ய சிநேகிதி. திருமதி. உஷா ராஜேந்தர் எனது தாயாருக்கு மிகவும் பிடித்தமானவர். அண்மையில் அவர்கள் இருவரும் சிங்கப்பூர் போய் வந்தார்கள்.

தமிழ், மலையாளம், ஆங்கிலம் உட்பட அரபு மொழியும் தெரியும். தெலுங்கு மொழியை இப்பொழுது தான் கற்று வருகிறேன்’’ என்றார்.

தினசரி சினிமா

### ஹோட்டல் விபத்து

சிங்கப்பூர், மார்ச். 17

சிங்கப்பூரில் ஆறு மாடி ஹோட்டல் ஒன்று இடிந்து விழுந்த சம்பவத்தில் இறந்தவர்களின் தொகை 11 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை இடிந்து விழுந்த கட்டட இடிபாடுகளுக்கு இடையில் இருந்து 11 பேர் மீட்கப்பட்டனர்.

# ★ பிரான்ஸில்— இடதுசாரி ஜனாதிபதி வலதுசாரி பிரதமர்

## தேர்தல் முடிவுகளினால் ஏற்பட்டிருக்கும் சிக்கல்

பாரிஸ், மார்ச் 17

இடதுசாரி ஜனாதிபதியின் கீழ் வலதுசாரி பிரதமர் பதவி ஏற்கும் சூழ்நிலை பிரெஞ்சு அரசியலில் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வலதுசாரி எதிர்க்கட்சியான டிகோலிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது

நாடாளுமன்றத்தின் 577 ஆசனங்களில் டிகோலிஸ்ட் கட்சி 289 ஆசனங்களை இத் தேர்தலில் கைப்பற்றியது.

குறைவான பெரும்பான்மையிருந்தாலும் எதிர்க்கட்சிக் கூட்டணி அரசு அமைக்கத் தயாராக உள்ளது — இப்படி டிகோலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஜாக்ஸ் சிறக் சொன்னார்.

வலதுசாரிப் பிரதமருடன் ஆட்சி நடத்தத்தான் தயாராக இருப்பதாக பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரண்ட் அறிவித்தார்.

ஜனாதிபதி, சோஷலிசக் கட்சியைச் சேர்ந்தவர். 1988 வரை திரு மித்தரண்ட் ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார்.

### பனமாவில் ஆர்ப்பாட்டம்

பனமா, மார்ச். 18

பனமா அரசாங்கம் கொண்டுவந்துள்ள பொருளாதாரச் சிக்கன நடவடிக்கைகளை எதிர்த்து தேசிய வேலை நிறுத்தம். ஆர்ப்பாட்டப் பேரணிகள் தலைநகரில் நேற்று இடம்பெற்றன.

20,000பேர் கொண்ட பேரணி ஒன்றுடன் பொலீஸார் மோதியதில் அதில்கலந்து கொண்ட ஒருவர்கொல்லப்பட்டார் 20 பேர் காயமடைந்தனர். 30பேர் கைதுசெய்யப்பட்டனர்

உலக வங்கியிடம் இருந்து கடன் பெறுவதற்கான தகுதியை நிரூபிக்கவே பனமாஅரசு பொருளாதாரச் சிக்கன நடவடிக்கைகளைக் கொண்டுவந்துள்ளது.

## ‘ராஜீவின் இந்தியா’ திரைப்படத்தின் நிலை

புதுடில்லி, மார்ச். 17

‘ராஜீவின் இந்தியா’ பற்றிய தொலைக்காட்சிப் படம் ஒன்றை ஒளிபரப்புவது பற்றி இன்னும் இந்திய அரசு முடிவு செய்யவில்லை

பிரச்சினைக்குரிய இப்படத்தை திரு ஜாக் அன்டர்ஸன் தயாரித்துள்ளார்.

இப்படம் நாட்டின் சரியான நிலையைப் பிரதிபலிக்கவில்லை என்ற காரணத்தினால் திரையிடப்படுவது தடைசெய்யப்பட்டது.

வேலை செய்யும்

## சிறுவர்களை விடுவிக்க நீதிமன்றத்தில் மனு

### தமிழக அரசுக்கு நோட்டீஸ்

தமிழ்நாட்டில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் குறைந்த சம்பளத்தில் நிர்ப்பந்தத்தில் வேலைசெய்யும் ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமிகளுக்கு விடுதலை வழங்கவேண்டும் என்ற ரிட்மனு உயர்நீதிமன்றம் முன் விசாரணைக்கு வந்தது

மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்றம், தமிழ்நாடு அரசுக்கு நோட்டீஸ் அனுப்பும் உத்தரவைப் பிறப்பித்தது.

பிரதம நீதியரசர் திரு. பி என். பகவதி, நீதியரசர்கள் வி. பாலகிருஷ்ண ஏராடி, எம். எம். தத் ஆகியோர் முன்னிலையிலே மனுவிசாரணைக்கு வந்தது.

# வெளி உலகில்

ஆயுதப் பரிகரணம்:

## 6 நாடுகள் கோரிக்கைக்கு அமெரிக்கா-- ரஷ்யா பதில்

### ஸ்டொக்ஹோமில் ராஜீவ் தகவல்

ஸ்டொக்ஹோம், மார்ச். 17

ஆயுத பரிகரணம் பற்றி ஆறுநாடுகள் கூட்டாக விடுத்த வேண்டுகோளுக்கு அமெரிக்க, ரஷ்யத் தலைவர்களிடம் இருந்து பதில் கிடைத்துள்ளதாக பிரதமர் ராஜீவ் காந்தி சொன்னார்.

சுவீடனில் வைத்து செய்தியாளர் மத்தியில் பிரதமர் காந்தி இத்தகவலை வெளியிட்டார்

மறைந்த சுவீடிஷ் பிரதமரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட பின்னர் பிரதமர் காந்தி செய்தியாளர்களைச் சந்தித்தார்.

கடந்த ஆண்டு புதுடில்லியில் நடந்த 6 நாடுகளின் உச்சி மாநாட்டில் ஆயுத பரிகரணம் பற்றிய வேண்டுகோள் ஒன்று உலக வல்லரசுகளுக்கு விடுக்கப்பட்டது

அமெரிக்க அதிபர் றேகனும் ரஷ்யா அதிபர் கோர்பச்சேவும் வேண்டுகோள் பற்றிய பதில்களை அனுப்பியிருக்கின்றனர்.

அமெரிக்க அதிபரின் பதில் தொழில் நுட்பம் சம்பந்தமான விளக்கங்களைக் கொண்டுள்ளது

இவை பற்றி தற்சமயம் ஆராயப்படுகின்றது.

அதன் பின்னரே அமெரிக்காவுடன் பேச்சுக்கள் நடத்தப்படும்.

ஆறு நாடுகளின் அடுத்த உச்சி மாநாடு விரைவில் நடைபெற உள்ளது.

இப்படி பிரதமர் காந்தி சொன்னார்.

சுவீடனில் பிரதமர் காந்தி, பாகிஸ்தான், சிம்பாப்வே நாட்டுப் பிரதமர்களையும் சந்தித்துப் பேசினார்.

### சீர்திருத்தம் கோரி பேரணி

சோல், மார்ச் 17

தேர்தல் சீர்திருத்தங்களைக் கோரியும் தேர்தலை உடனடியாக நடத்தும்படி கோரியும் தென் கொரியாவில் ஜனாதிபதிக்கு எதிராக பல்கலைக் கழக மாணவர்கள் பேரணி நடத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### சிரமதானம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கொக்குவில் செம்பியன் ஒழுங்கை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

கடந்த ஞாயிறு இடம்பெற்ற இச்சிரமதான இயக்கம் கொக்குவில் கிழக்கு வளர்மதி கழகம், சனசமூக நிலைய இளைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது.

## இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பும் நிலை இல்லை

### தமிழக அமைச்சர் அறிவிப்பு

ராமேஸ்வரம், மார்ச் 18

தமிழ்நாட்டில் உள்ள தமிழ் அகதிகள் திரும்பிப் போகும் சூழ்நிலை தற்சமயம் இலங்கையில்இல்லை.

இனப்பிரச்சினைக்கு முழுத்தீர்வு கண்ட பின்னரே இலங்கைத் தமிழ் அகதிகள்தாயகம் திரும்ப வேண்டும்.

தமிழ்நாடு மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு வி. ராமசாமி, மண்டப முகாமில்தங்கிஉள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் மத்தியில் பேசுகையில் சொன்னார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் திரும்பி வரலாம் என்று இலங்கை அமைச்சர் அத்துலத்முதலி விடுத்த அறிவிப்பு, தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் உள்ள இலங்கை தமிழ் அகதிகள் மத்தியில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

இலங்கை நிலைமை மோசமடைகின்றது. இந்த நிலைமையில் எப்படி இலங்கை திரும்புவது? என்ற அபிப்பிராயமே அகதிகள் மத்தியில் மேலோங்கி நிற்கிறது.

இலங்கை அமைச்சரின் அறிவிப்புநேர்மையானதாகத் தெரியவில்லை— இப்படிப்பட்ட அபிப்பிராயம்தான் தமிழ் அகதிகள் மத்தியில் நிலவுவதாக ‘இந்து’ நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனிடையில் இந்தியக் கடல் எல்லைக்குள் தொழில்புரியும் இந்திய மீனவர்களின் பாதுகாப்புப்பற்றி தமிழ்நாடு அமைச்சர் திரு. ராமசாமி பேச்சுக்கள் நடத்தினார்.

இந்தியக் கடலோர எல்லைவரை சென்று அமைச்சர் பார்வையிட்டார்.

### இன்று விடுதலை

மட்டக்களப்பு மார்ச், 18

மட்டக்களப்பைச் சேர்ந்த 27 பேர் பூஸா தடுப்பு முகாமில் இருந்து இன்று விடுதலை செய்யப்படவுள்ளனர்.

அவர்களைப் பொறுப்பு ஏற்றுக்கொண்டுவர மட்டக்களப்பு அரச அதிபர் திரு. ... முத்து இரண்டு அதிகாரிகளை பூஸாவுக்கு அனுப்பி வைத்துள்ளார்



## விடியும் வரை காத்திருக்கவேண்டாம்!

எத்தனையோ முக்கியமான நிகழ்ச்சிகள், அதிர்ச்சிதரும் சம்பவங்கள் பொழுது புலர்வதன்முன் நடைபெற்றுவிடுகின்றன. இவற்றை உள்ளூரிலோ அல்லது பிறநாடுகளிலோ இருக்கும் உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு உடனடியாக அறிவிப்பது அவசியமாக இருக்கின்றது. ‘பொழுது விடிந்தால் தானே அந்த மனிதருக்கு எங்கேயாவது போய் ரெலிபோன் செய்யலாம். ஆனால் அந்த மனிதரோ பொழுது புலர்வதன் முன்பே கடமைக்குப் போகின்றவராச்சே! சய்! என்ன செய்யலாம்’ என்று அங்கலாய்த்துக் கொண்டு — ஆம், நீங்கள்

**விடியும் வரை காத்திருக்கவேண்டாம்!**

**அவலம் மலிந்த நெருக்கடியான இந்நாட்களிலும் திருவருள் துணைகொண்டு அஞ்சாது நின்று, இரவு பகல் இருபத்திநான்கு மணி நேரமும், சனி ஞாயிறு விடுமுறை நாட்கள் உட்பட்ட எல்லா நாட்களிலும் கண் துஞ்சாது, சோராதிருந்து, மெய்வருந்திக் கருமம் ஆற்றுகிறோம். உங்கள் ரெலிபோன் அழைப்புக்களை இரவு பகல் எந்நேரமாயினும் எந்நாளாயினும் எந்நாட்டிற்காயினும் தங்குதடையின்றிப் பெற எங்களிடம் வாருங்கள் அல்லது எங்களைக் கூப்பிடுங்கள்.**

பாதுகாப்பான இடம்! பணிவன்பான சேவை! அச்சம் வேண்டாம்!

**ரெலிகுளோப்**

ஆர். ஜி. கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ். நகர்.

ரெலிபோன்: 25088 ஆறு தொடர்புகள்.

## ஆயுதத்தை நம்பாதீர்; அன்பே பிரதானம்

### தளபதியின் அறிவுரை

மட்டக்களப்பு, மார்ச். 18

அப்பாவிகளைச் சுடாதீர்கள். உண்மையான தீவிரவாதிகளுடன் மோதுங்கள். உங்களைக் கண்டு மக்கள் பயந்தோடும் நிலையை ஏற்படுத்தாதீர்கள்.

மட்டக்களப்பு, கல்லடி அதிரடிப்படை முகாமில் உள்ள ஆயுதப் படையினருக்கு மேற்கண்ட உபதேசம் செய்யப்பட்டது

உபதேசம் செய்தவர் கூட்டுப்படைகளின் தளபதி பிரிகேடியர் சிறில் ரணதுங்கா.

விசேட ஹெலிக்கொப்டர்மூலம் நேற்றுக்காலை பிரிகேடியர் சிறில் ரணதுங்க மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

மட்டக்களப்பு மாவட்டப் பாதுகாப்பு நடவடிக்கைகள்பற்றி ஆராய்ந்தார்.

பின்னர்ஆயுதப்படையினரின் மத்தியில் பேசுகையில் மேலும் சொன்னதாவது;

ஆயுதத்தை நம்பாதீர்கள். அன்புதான் பிரதானம். அன்பின் மூலம் ஐக்கியத்தை மக்கள் மத்தியில் வளர்க்க முயற்சி எடுங்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தீவிரவாதிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் படையினர் வெற்றிகண்டது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்-

இப்படி பிரிகேடியர் ரணதுங்கா சொன்னார்.

### பொருள்கள் மீட்பு

நல்லூர், மார்ச். 18

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் உள்ள எவர்சில்வர் ஸ்தாபனத்தில் கடந்த காலங்களில் கொள்ளை அடிக்கப்பட்ட பொருள்களில் ஒரு பகுதி மீட்கப்பட்டுள்ளது.

கொள்ளை அடிக்கப்பட்ட பொருள்களின் ஒரு பகுதியை ரெலோ இயக்கமே மீட்டுத்தந்ததாக பிரஸ்தாப தொழிற்சாலை நிர்வாகம் தெரிவிக்கிறது

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
25 - 02 - 1925

உதிர்வு:
16 - 02 - 1986



திரு. வயிரமுத்து சின்னத்தம்பி
(கறுப்பூசி)
அவர்கள்
(இளைப்பாறிய இ.போ.ச. ஊழியர்)

திதி 18 - 3 - 86

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து கடமை, கண்ணியம், அன்புடன் எம்மை வாழவைத்த பாசம் நிறைந்த நேசத் தந்தையே! உங்கள் நினைவு என்றென்றும் எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியையின் போது சமுகமளித்தோருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் பல்வேறு உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றி அறிவித்தலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

‘லிங்கலாசா’, ..., ..., சுன்னாகம்.

## ஓராண்டு நினைவஞ்சலி



யோ யோசப் மணி

தோற்றம்: 1935-01-01 மறைவு: 1985-03-18

(கட்டட ஒப்பந்தக்காரர்)

அளவிலா
அன்பு செலுத்திய நேசரே
எம் கண்ணீரில்
உங்கள் நினைவு வாழ்கிறது.

மனைவி, பிள்ளைகள், சகோதரர்.

9, யோசப் மணி ஒழுங்கை,
மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகு: 11-01-1919



விண்ணுலகு: 29-03-1985

திருமதி பொன்னையா சிவக்கொழுந்து

விண்ணுலகு நீங்கள் சென்று ஓராண்டு ஆனாலும், இம் மண்ணைவிட்டு நாம் வரும் போதும் உங்கள் அன்பு முகம் எம் நெஞ்சை விட்டு மாறுது அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,
கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வேலணை மேற்கு,
வேலணை-8.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இனக்கொலைகளை மறைப்பதில் இலங்கை அரசு ஈடுபாடு

## இந்தியாவின் முடிவு இது

"இலங்கை சம்பந்தமான கொள்கையை இந்தியா மீளாய்வு செய்ய வேண்டும்" என்ற தலைப்பில் 'இந்து' நாளிதழில் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தின் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.

1985 ஆகஸ்ட் மாதத்தில் புதுடில்லியில் வைத்து தயாரிக்கப்பட்டது ஒரு விரிவான நகல் யோசனைத் திட்டம்.

அச்சமயம் டாக்டர் எச் டபிள்யு ஜெயவர்த்தனவும் புதுடில்லியில் இருந்தார்.

இலங்கை அரசப் பிரதிநிதிகளால் இது பின்னர் விரிவாக்கப்பட்டது.

இந்த நகல் திட்ட யோசனை தயாரிப்பில் இந்தியாவுக்கும் பங்கு உண்டு என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன பெப்ருவரி 20 இல் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் மறைமுகமாகச் சொன்னார்.

எதிர்காலப் பேச்சுக்கள் இந்த நகல் திட்டத்தின் அடிப்படையில் தான் என்று திரு ஜெயவர்த்தன நாடாளுமன்ற உரையில் வலியுறுத்தினார்.

இந்த நகல் திட்ட யோசனையை ஆறு தமிழர் அமைப்புக்களும் முற்றாக நிராகரித்து விட்டன.

அண்மைக் கால நிகழ்வுகளைக் கவனத்திற்கு எடுத்து, அரசியல், ராஜதந்திரப் போர்வையில் இராணுவ ரீதியிலான இனக்கொலையை மூடி மறைக்கும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபடுகின்றது என்ற சரியான முடிவுக்கு இந்தியா வந்துள்ளது.

அங்கிருந்து கிடைக்கும் தகவல்களை வைத்து முழு நிலைமையையும் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

'இந்து'வுக்கு இலங்கை அரசு அமைச்சரும் இ. தொ. கா. தலைவருமான திரு எஸ் தொண்டமான் ஒரு பேட்டி அளித்தார்.

"ஒரு சம்பவத்துக்கு இந்தியா கவலை தெரிவிக்கிறது. அந்த சம்பவத்தில் இறந்தவர்களின் தொகையிலும் பார்க்க, கவலை தெரிவித்த பின்னர் இடம் பெறும் சம்பவங்களில் இறப்பவர்களின் தொகை கூடுதலாக இருக்கின்றது"—

இப்படி திரு தொண்டமான் அப்பேட்டியில் சொன்னார்.

அப்படி என்றால் கவலை தெரிவிப்பதன் அர்த்தம் என்ன?

1983 இல் இந்தியாவுடன் இணக்கம் காணப்பட்ட "இணைப்பு சி' சம்பந்தமான இருதரப்பு இடைவெளியை குறைப்பதிலான முன்னேற்றம்;

'இணைப்பு சி' பின்னர் இலங்கை அரசினால் ரத்துச் செய்யப்பட்டமை;

1984 வரை இழுத்தடிக்கப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி ஜெயவர்த்தனவால் கொடுக்கப்பட்ட எண்ணற்ற உறுதி மொழிகள்;

இராணுவ மயமாக்கல் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கையில் பாக்குநீரிணையில் இருபக்கத்திலும் அரசியல் தீர்வு பற்றி வளர்க்கப்பட்டு வந்த கற்பனைகள்;

திம்புவுக்கு முன்னரும் பின்னரும் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்தம் மூலம் கிடைத்த ஏமாற்றமான கற்பனைகள்;

இலங்கை அரசின் நகல் திட்ட யோசனைகள்;

தமிழர் விடுதலைக் கூட்டணி அதற்கு இந்திய அரசு ஊடாக இலங்கை அரசுக்குச் சமர்ப்பித்த மாற்று யோசனைகள்;

அம்மாற்று யோசனைகளை இலங்கை அரசு அப்படியே நிராகரித்தமை—

இவை எல்லாம் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வைக்காண முயன்ற இந்திய அரசின் கதை;

பாதுகாப்பான கௌரவமான, சுயாட்சி நிறைந்த, ஐக்கிய இலங்கைக்கு உட்பட்ட தீர்வு ஒன்றைக்கான வேண்டும் என்ற அறிவுள்ள மிதவாத எண்ணம் நிறைவேறும் வாய்ப்பு 1983 இல் இருந்ததிலும் பார்க்க 1986 முற்பகுதியில் மிகவும் குறைவாக உள்ளது.

இந்தச் சிக்கலான தருணத்தில் கொழும்பில் நிலவும் எண்ணங்களைப் பார்த்தால் இந்தியாவின் பங்களிப்பு எந்த வரையறைக்குட்பட்டுள்ளது என்பது வெளிக்காட்டப்பட்டு விட்டது.

துரதிஷ்ட வசமாக ராஜீவ் காந்தி நிர்வாகத்திலான இலங்கை பற்றிய இந்தியாவின் கொள்கை, அணுகுமுறையினால் சந்தேகத்தின் நன்மை இலங்கை அரசுக்கு அதிக காலம் வழங்கப்பட்டு விட்டது.

இலங்கை பற்றிய கொள்கையில் இறுக்கமின்மை, முரண்பாடு இருந்தமைக்கு காரணம் இலங்கையில் நிலவும் பாரதூரநிலை பற்றிய அறிவு போதாமையும் ராஜதந்திர ரீதியில் விரைவான தீர்வைக் காணவேண்டும் என்ற அவாவுமே ஆகும்.

தெளிவற்ற 'நல்ல அயல்நாட்டுக்கொள்கை' யுடன் கூடிய அடிக்கடி பறந்து சென்ற இராஜதந்திரத்தையே இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு.ரொமேஷ் பண்டாரி கடைப்பிடித்தார்.

இதற்கு வெளியார்களிடம் இருந்து நல்ல பாராட்டுதல்கள் கிடைத்தன. ஆனால் அடைந்த பயன் ஒன்றுமே இல்லை. இந்தியாவை எங்குமே இந்தவழி கொண்டுபோகவில்லை.

இந்தியாவின் கடுமையான போக்கினால் உண்மையில் கண்டதுதான் என்ன?

மத்தியஸ்தம் செய்யும் பொறுப்பில் இருந்து இந்தியாவை விலகிக் கொள்ளும்படி இலங்கை அரசு உத்தியோக ரீதியில் கேட்டுக்கொண்டால் என்ன நடக்கும்?

கொள்கை மீளாய்வு செய்யும் போது இக்கேள்விகளுக்கான பதில்கள் இலகுவாக இருக்காது.

மற்றப்பக்கத்தில் இருந்து இதற்கான பதில்கள் நியாயமானவையாகவோ அல்லது இறுமாப்பும் இனக் கொலைத் தன்மையும் கொண்டதாகவோ வந்தாலும், இந்தியாவின் அடிப்படைக் கவலைக்குரிய விஷயத்தில் இவை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே நிச்சயம் இருக்கும்.

இலங்கையின் இனப் பிரச்சினை, அரசியல் நெருக்கடியைப் பொறுத்த வரையில் ஏனைய வெளிச்சக்திகளைப் போன்று இந்தியாவைக் கருத முடியாது.

இலங்கையின் அளவிலும் பார்க்க பலமடங்கு பெரிய அயல் நாடாக இந்தியாவிளங்குகின்றது.

ஆகவே சிறிய தீவின் சிந்தனையிலும் உளப்பாங்கிலும் இந்தியாவின் செல்வாக்கு அதிகமாக இருக்கும்.

இச்செல்வாக்கு இதுகாலவரை அடக்கி வைக்கப்பட்டுள்ளது'

இந்த விஷயத்தில் இந்தியாவின் உள்எண்ணம் வலியுறுத்தப்பட வேண்டும்.

இந்த விஷயத்தில் முதலாவதும் முக்கியமானதும்; வழமைக்கு மாறான கலவரங்கள் மத்தியில் வாழும் இலங்கைத் தமிழருக்கு ஒருமைப்பாட்டுக்கு உறுதுணையாக நிற்பதே.

இரண்டாவது;1983இல் இருந்து இந்தியாவுக்கு 1 லட்சத்து 20 ஆயிரம் அகதிகள் வந்துள்ளமை பிரச்சினை இழுபடும் வரை இச்சுமையும் தொடரும்.

மூன்றாவது; இந்திய வம்சாவழியினரும் இந்தியப்பிரஜைகளும் இப்பிரச்சினைக்குள் சிக்கி இருப்பது.

இறுதியானது; விரும்பத்தகாத, அபாயகரமான பலவிதமான வெளிநாட்டு ஏஜன்ஸிகளைக் கொண்டு இராணுவமயப்படுத்தல் செய்வதினால் பூகோள-அரசியல் ரீதியில் இப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

மிதமான, நியாயமான, செயல் படுத்தக்கூடிய ஐக்கிய இலங்கைக்கு உட்பட்ட தீர்வு ஒன்றைக்காண முயலும் அதே நேரத்தில் இந்தியா தனது கொள்கையையும் தனது விருப்பத்தையும் மீளாய்வு செய்ய வேண்டியது அவசியம்.

---

## உதய சங்கற்பம்

பாருக்குள்ளே தெய்வம் ஒன்று- இதில் பற்பல சண்டைகள் வேண்டாம்

-மகாகவி பாரதி.

---

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24805 22073

18-03-86

த. பெ. 23

## வங்கியை வழிக்கு கொண்டுவர ஒரு வழி!

வடபகுதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் முன்னால் நேற்றுத் தொடக்கம் மீண்டும் மறியல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் வங்கிக்கிளைகளில் அடகு வைத்த நகைகளை இங்கேயே வைத்துத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை முன்வைத்தே மறியல் போராட்டம் நடைபெறுகிறது.

மக்கள் வங்கியில் அடகு வைத்த நகைகள் தொடர்பாக முன்னரும் மிக நீண்ட நாட்களாக மறியல் நடத்தப்பட்டு வந்தது அடகு நகைகளைத் திருப்பித்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரியே அப்போது தொடர்ச்சியான போராட்டம் நடைபெற்றது.

மக்கள் குரலுக்குச் செவி சாய்ப்பதாக நிர்வாகம் காட்டிக்கொண்டது. நகைகளைத் திருப்பித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தது. ஆனால் மக்களின் போராட்டத்தை முறியடிக்க எடுக்கப்பட்ட ஒரு ஏமாற்று வித்தையாகவே அது முடிந்தது

இப்போது வடபகுதியில் அடகு வைக்கப்பட்ட நகைகளை கொழும்பில் திருப்பிக் கொடுக்கப் போவதாக மக்கள் வங்கி உயர்பீடம் அறிவித்திருக்கிறது.

இப்படி ஒரு வம்புத்தனம் இருக்க முடியுமா என்று சந்தேகப்பட வேண்டியுள்ளது.

இங்கு இயங்கும் மக்கள் வங்கிக் கிளைகளில் தான் நகைகள் அடகு வைக்கப்பட்டன. அவை இங்கு கொள்ளை அடிக்கப்படுகின்றன என்று கூறிக் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அவற்றை இங்கேயே வைத்துப் பாதுகாக்க அரசாங்கத்துக்கும், அரசாங்க படைகளுக்கும், மக்கள் வங்கிக்கும் திராணி இருக்கவில்லை. அந்த விஷயத்தில், போராளிகளிடம் தான் தோல்வி அடைந்ததை அரசாங்கம் மறைமுகமாக ஒப்புக்கொண்டது என்றே கொள்ள வேண்டும்.

வடபகுதியைச் சேர்ந்த ஏழை விவசாயிகள், வசதி குறைந்தோர் பல காலம் சேமித்துத் தேடிய பெறுமதி மிக்க சொத்துக்கள் அந்த அடகு நகைகள். விமான மூலம் அவற்றைக் கொழும்புக்கு எடுத்துச் செல்வதில் இருந்த அவசரம் அவற்றை இங்கு கொண்டு வந்து திரும்பக் கொடுப்பதில் இருக்கவில்லை.

அவற்றை இங்கு பாதுகாப்பாக வைத்து வழங்க முடியாது என்று காரணம் கூறப்படுகிறது. அது யாருடைய பலவீனம்?

அரசாங்கத்தால் பாதுகாப்பாகக் கொண்டு வர முடியாத நகைகளை, தமிழ்மக்கள் கொழும்பிலிருந்து எப்படிப் பாதுகாப்பாகத் தமது வீடுகளுக்குக் கொண்டுவந்து சேர்க்க முடியும்?

தமிழ்மக்களின் நகைகளை கொழும்பில் வைத்துக் கொள்ளையிடச் செய்வதற்கு இது ஒரு சதித்திட்டமே அன்றி வேறு இல்லை. அல்லது இப்படியே பல பல காரணங்களை வைத்து மக்கள் வங்கியே — அரசாங்கமே தமிழ்மக்களின் நகைகளை ஏப்பம் விட்டுச் சூறையாடப் பார்க்கிறதோ?

அடகுநகையை வாடிக்கையாளர்தாம்திரும்பப் பெற விரும்பிய நேரத்தில் அவருக்கு வழங்காதது ஒரு நம்பிக்கை மோசடி; ஒப்பந்த மோசடி. அது சட்டப்படி குற்றம். நகைகளைத் திருப்பித் தருவதாகக் கூறி பணத்தையும் பெற்றுக் கொண்டு கொடுக்காதிருப்பது மற்றொரு மோசடி

இந்த இரண்டு மோசடிகளை ஒருவர் இருவரிடம் செய்யவில்லை. இந்த வகையில் மக்கள் வங்கி — அரசாங்கம் பல்லாயிரக்கணக்கானோரை மோசடி செய்திருக்கிறது.

தமிழ்மக்களை இராணுவ வழியில் மட்டுமன்றி சிவில் வழியிலும் அரசாங்கம் பழிவாங்குவதன் ஆரம்ப கட்டமே இந்த நடவடிக்கை என்று ஏன் கருதக் கூடாது?

எனவே மறியல் போராட்டத்தை நடத்துவதோடு நின்று விடாமல் இவ்விஷயத்தை சர்வதேச நீதி ஸ்தாபனங்களின் கவனத்துக்கும் கொண்டுவர வேண்டும். அரசாங்கத்தை — மக்கள் வங்கியை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி நம்பிக்கை மோசடி செய்ததாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம்.

வடபகுதியில் அடகு வைக்கப்பட்ட நகைகளை இங்கேயே வைத்து வழங்க உத்தரவிடுமாறு இலங்கை நீதிமன்றங்களிடமும் நியாயம் கோரலாம். மக்கள் வங்கியை வழிக்குக் கொண்டுவர அதுவும் ஒரு நல்ல மார்க்கம் என நாம் கருதுகிறோம்.

## நெல்லியடியில் வழிமறிப்பு போராட்டம்

உடுப்பிட்டி, மார்ச் 18

நெல்லியடிப் பகுதியில் நேற்று வழிமறிப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடிச் சந்தியிலும், வதிரிச் சந்தியிலும் வழிகள் மறிக்கப்பட்டுள்ளன. பெண்களும் இவ்வழிமறிப்புப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

இதனால் பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி, உடுப்பிட்டியூடாக நடைபெற்று வரும், இ. போ. ச; தனியார் மினிபஸ் சேவைகள் நடைபெறவில்லை.

இவ் வழிமறிப்புப் போராட்டத்தினால் வடமராட்சியிலிருந்து அரச, தனியார் ஊழியர்கள் வேலைக்குச் செல்ல முடியாது பெரிதும் கஷ்டமடைந்தனர்.

---



பொய்யாமொழி

குறள்:
பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

பொருள்:
இன்னபயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலை விடப் பெரிதாகும்.

---

## சைவம் பற்றி கருத்து வெளியிட காத்திரமான அமைப்புத் தேவை

### நல்லை முதல்வர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 18

சைவ ஆலயங்கள், குருக்கள், வழிபாடு பாதுகாப்புக்கு மட்டும் அல்லாமல், சைவக் கோயில்கள் மத்தியில் நிலவும் பிரச்சினை, சைவ நடைமுறைகள் தொடர்பாகவும் முடிந்த முடிபாகக் கருத்து வெளியிட ஒரு காத்திரமான அமைப்பு சைவமக்கள் மத்தியில் அவசியம்.

நல்லை ஆதீனத்தில் சைவ ஆலய பாதுகாப்புத் தொடர்பாக நடைபெற்ற மாநாட்டில் ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக பரமாச்சாரியஞானசம்பந்த சுவாமிகள் தனது தலைமையுரையில் இவ்வாறு கூறினார்.

'கலாச்சார முக்கோணத் திட்டத்தின்கீழ் யுனெஸ்கோ நிதிய உதவிகள் இந்த நாட்டுக்கு வழங்கப்படுகின்றன. இவ்வுதவியினை ஒருபுறத்தே பௌத்த சமய அகழ்வாராய்ச்சிக்கும் புனருத்தாரணத்துக்கும், மறுபுறத்தே பிறமதங்களை அழிப்பதற்கும்பயன்படுத்துகின்றார்கள். இதனை உலகுக்கு எடுத்து உரைக்கவேண்டும்'—

—இவ்வாறு பல்கலைக் கழகத் தமிழ்விரிவுரையாளர் கலாநிதி ஐ. பாலசுந்தரம் குறிப்பிட்டார்.

'ஆலய உடைமைகள், பொருட்கள் புனிதமானவை. நேர்த்திக்கடனுக்குத் தரப்பட்டவை. ஆலயங்கள் புனித வழிபாட்டுத் தலங்கள். இவற்றை யாரும் தீண்டக்கூடாது. அழிக்கக்கூடாது. நயினாதீவுச் சம்பவங்கள் மீண்டும் நடைபெறலாகாது.

மக்கள் பஜனை, கந்த புராணபடனம் வாசித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டு ஆன்மீக பலத்தைப் பெருக்கவேண்டும்.

இவ்வாறு கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருமதி. மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தனது பேச்சில் குறிப்பிட்டார்.

'சைவமக்கள் ஆசாரங்களைப்பேணவும், கோயில்களை ஆகம விதிப்படி பேணிக் காக்கவும் பாரம்பரிய மரபு ரீதியான அமைப்பு சைவமக்களுக்குத்தேவை'-என்று திரு. கு. சரவணவேல் கூறினார்.

'காலங்கடந்து ஆயினும், இப்படியானதொரு அமைப்பு சைவமக்கள் மத்தியில் உருவாகும் வாய்ப்பு நமக்குக் கிடைத்த பேறு'-என்று இணுவில் இந்து இளைஞர் இயக்கப் பிரமுகர் திரு. இ. [illegible] ஆதீனத் தலைவரின் வழிகாட்டலின்கீழ் ஏனைய சமயத் தலைவர்களுடன் இணைந்து யாழ் மாவட்டத்தில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெறும்படியும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும்படியும் அரசாங்கத்தைக் கோரவேண்டும்.

இவ்வாறு யாழ்மாநகர சபையின் முன்னாள் மேயர் திரு இராஜா விசுவநாதன் கூறினார்.

## இனப் பிரச்சினைக்கான தீர்வு தன் கையில் என்கிறார் சிறிமா

கொழும்பு, மார்ச்18

இனப் பிரச்சினைக்கான தீர்வு, என் கைகளில் உள்ளது.

முறைப்படி அழைத்துக் கேட்டால் தீர்வு காண நான் ஒத்துழைப்பு வழங்குவேன்.

சுதந்திரக்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் திருமதி பண்டாரநாயக்கா இத்தகவலை வெளியிட்டார்.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒத்துழைப்புத் தரும்படி மேடைகளில் வைத்தும் பொதுக் கூட்டங்களில் வைத்தும் தான் அழைப்பு விடுகிறார்கள்.

இப்படிக்கோருவது சரிவராது.

அமர்ந்து இருந்து பேசுவதன்மூலம்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

இனப்பிரச்சினை, தேசிய முக்கியம்வாய்ந்த ஒன்று. உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும்.

அரசாங்கம் வடக்கு-கிழக்கில் நிலவும் தீவிரவாதப் பிரச்சினையை வேறுவழியில் அணுகுகின்றது.

இப் பிரச்சினைக்குத் தீர்வு என் கையில் உள்ளது முறைப்படி,தகுந்த முறையில் என்னை அழைத்தால் இனப் பிரச்சினைக்குத்தீர்வுகாண நான் ஒத்துழைப்பு வழங்குவேன்.

இப்படி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார்.

## வீட்டு நாய்களுக்கு தடுப்பு ஊசி

### 22, 23-ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச்.18

கோண்டாவில் பகுதியில் உள்ள வீட்டு நாய்களுக்கு விசர்நாய்த் தடுப்பு ஊசி ஏற்றப்படவுள்ளது.

மார்ச் 22, 23 ஆம் திகதிகளில் இது இடம்பெற உள்ளது.

யாழ் அபிவிருத்திச் சபை கொக்குவில் உபஅலுவலக அதிகாரியும் பொதுசுகாதார அதிகாரியும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

கட்டாக்காலி நாய்களை அழிக்கும் திட்டம் மார்ச் 18இல் கோண்டாவில் மேற்குப் பகுதியிலும் மார்ச் 20இல் கோண்டாவில் கிழக்குப் பகுதியிலும் செயற்படுத்தப்படும்.

## இணைப்பை வழங்கி பிரச்சினையை தீர்த்திருக்கலாம்

### ஆனால் நாடு பிரிந்திருக்கும்:ஜனாதிபதி

கொழும்பு, மார்ச். 18

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு சம்மதித்து இருந்தால் எப்பொழுதோ பயங்கரவாதத்தைத் தீர்த்து இருக்க முடியும். ஆனால் நாடு பிரிவதை நாம் அனுமதிக்க முடியாது.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன கூறினார்.

அம்பலாந்தோட்டை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி பேசினார்.

திரு. ஜெயவர்த்தன மேலும் சொன்னதாவது;

வடக்கு - கிழக்கு இணைந்த தீர்வுதான் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் திட்டமா? மறைந்த பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வைத்தான் விரும்பினார். அது தான் சுதந்திரக்கட்சி இன்றும் சிந்திக்கிறதா?

அப்படி என்றால் தீவிரவாதிகளுடன் சுதந்திரக் கட்சியும் சேர்ந்து செயல்படுகிறது என்பதுதான் அர்த்தம்.

வடக்கு-கிழக்குஇணைப்புக்கு சம்மதித்து இருந்தால் எப்போதோ பயங்கரவாதத்தை நாம் தீர்த்து இருப்போம். ஆனால் நாடு பிரிவதை நாம் விரும்பவில்லை. அதை அனுமதிக்கவும் மாட்டோம்.

இப்படி திரு ஜெயவர்த்தன கூறினார்.

## பண்டித வகுப்பு

யாழ்ப்பாணம். மார்ச் 18

சிறந்த தமிழாசிரியர்களைக் கொண்டு நல்லை ஆதீனத்தில் பால பண்டித, பண்டித வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் இப் பண்டித வகுப்புக்களை இலவசமாக நடத்துகின்றது.

பேராசிரியர் அ சண்முகதாஸ், வித்துவான் க சொக்கலிங்கம், பண்டிதர் பொன்னுத்துரை, வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் உட்பட பல சிறந்த தமிழறிஞர்கள் வகுப்புக்களை நடத்துகின்றனர்.

## குருபூஜை

யாழ்ப்பாணம், மார்ச்.18

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் குரு மகா சந்நிதானம் நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகளது 5 ஆவது ஆண்டு குருபூஜை மார்ச் 19 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்

கிரியைகள் அலைத்தும் ஆதீன சிவாச்சாரியார் மறைத்திரு கந்த. சாம்பசிவக் குருக்கள் தலைமையில் நடைபெறும். சிவஸ்ரீ சாம்ப. கணேசக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்துவார்.

மாகேசுர பூஜையும் நடைபெறும்.

## கிரிக்கெட் விளையாட அவர்களுக்குப் ஆசை!

மட்டக்களப்பு, மார்ச்,18

மட்டக்களப்பில் சிப்பாய்களுக்கு கிரிக்கெட் அடிக்கும் ஆசை வந்து விட்டது.

இது பற்றிய விவரம் வருமாறு:

நேற்றுப் பகல் மட்டக்களப்பு புனிதமைக்கேல் கல்லூரியில் மாணவர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டு இருந்தனர்.

வீதியால் நடந்து வந்து கொண்டு இருந்த சிப்பாய்கள் கிரிக்கெட் விளையாட்டைக் கண்டனர்.

உடனே மைதானத்துக்குள் நுழைந்தனர்.

அவ்வளவுதான். கிரிக்கெட் விளையாடிய மாணவர் பாய்ந்து ஓடினர். சிப்பாய் ஓடிய மாணவர்களைக் கூப்பிட்டு 'நாங்கள் ஒன்றும் செய்ய மாட்டோம். எங்களுக்கும் கிரிக்கெட் விளையாட ஆசை'- என்று கூறியதுடன் மட்டும் நிற்கவில்லை.

அரை மணித்தியாலம் வரை மாணவர்களுடன் கிரிக்கெட் விளையாடிவிட்டே ரோந்தைத் தொடர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வாசித்துவிட்டீர்களா?
'செய்திச்சுடர்'
0 இலங்கை இரத்தம் சிந்தி இறக்கிறது - டேவிட் செல்போன்
0 இலங்கை இந்திய உறவுகளில் ஒரு முக்கிய திருப்பம் - மேர்வின் டீ சில்வா
0 தமிழகத்தில் எம். ஜி. ஆரின் இன்றைய நிலை
0 ஸ்ரீமாவோவுக்கு ஜனாதிபதி ஆசை.
விலை: 1 ரூபா 50 சதம்
ஆசிரியர்: 'செய்திச்சுடர்'
புளியங்கூடல் சந்தி — வேலணை

# உதயன்

18 03. 1986 செவ்வாய்க்கிழமை

வாசித்துவிட்டீர்களா?
'செய்திச் சுடர்'
0 இலங்கை இரத்தம் சிந்தி இறக்கிறது - டேவிட் செல்போன்
0 இலங்கை இந்திய உறவுகளில் ஒரு முக்கிய திருப்பம் - மேர்வின் டீ சில்வா
0 தமிழகத்தில் எம். ஜி. ஆரின் இன்றைய நிலை
0 ஸ்ரீமாவோவுக்கு ஜனாதிபதி ஆசை
விலை: 1 ரூபா 50 சதம்
ஆசிரியர்: 'செய்திச்சுடர்', புளியங்கூடல் — வேலணை.

## தமிழ் அகதிகளுக்கு வவுனியாவில் புதிதாக முகாம் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 18

வவுனியாவில் பறையனாலங்குளம், பத்தினாதபுரம், செட்டிகுளம், சண்ணுட்டி, அண்ணபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து வெளியேறிய தமிழ் அகதிகளுக்கு புதிய முகாம் அமைக்கப்படமாட்டாது.

வவுனியா ஆயுதப் படை முகாமில் நடந்த மாநாடு ஒன்றில் இத்தகவலை வவுனியா இணைப்பு அதிகாரி வெளியிட்டார்.

வெளியேறிய அகதிகள் மீண்டும் பழைய இருப்பிடங்களுக்கே திரும்பிச் செல்லவேண்டும் என்றும் இணைப்பதிகாரி சொன்னார்.

இ தொ.கா. வவுனியா மாவட்டப் பிரதிநிதி திரு பி மருதப்பிள்ளை பேசுகையில், ஒரு மாத காலத்துக்காவது அகதி முகாம் ஒன்றை அப்பகுதி மக்களுக்காக நிறுவ வேண்டும் என்று இணைப்பதிகாரியைக் கேட்டுக் கொண்டார்.

அரச அதிபர், ஆயுதப் படை அதிகாரிகள், வவுனியாப் பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்

## புலிகள் வீர வணக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

இறந்த இரண்டு போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

மார்ச் 16இல் கொண்டமனாறு பகுதியில் இறந்த சங்கருக்கும் கிளிநொச்சி — கரடிப்போக்குச் சந்தியில் இறந்த பரனுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அஞ்சலி செலுத்தியுள்ளது.

பேராதனை செல்லும் மாணவர்கள்

## இன்று காலை பெயர் பதிவு செய்ய வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 18

பேராதனைப் பல்கலைக்கழகம் செல்வதற்காக இதுவரை பெயர் பதிவு செய்யாத மாணவர்கள் இன்று (18 3 86) காலை 8.30க்கும் 10.00 மணிக்கும் இடையில் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் அவைக்கு முன்பாக பொறியியல் பீட மாணவர்களான சிவகுமார், தேவசிகாமணி ஆகியோரிடம் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதன் காலை 6.30 மணிக்கு யாழ் பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ் வண்டியில், பெயர் பதிவு செய்யாத மாணவர்கள் ஏற்றப்படமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

## மக்கள் வங்கிகள் முன் மறியல் போராட்டம் ஆரம்பம்

### தொடர்ந்து நடக்கும் என அறிவிப்பு

நல்லூர், மார்ச்.18

நேற்று யாழ்ப்பாணத்தில் பிராந்திய மக்கள் வங்கி அலுவலகம் உட்பட சகல மக்கள்வங்கிகளின் முன்பாகவும் நகை அடகு வைத்தோர் மறியல் போராட்டம் செய்தனர்.

இதனால் மக்கள் வங்கி வேலைகள் நேற்று ஸ்தம்பிதம் அடைந்தன

தொழிலுக்கு வந்த வங்கி ஊழியர்கள் வீதியோரத்தில் நின்று விட்டு வீடு திரும்பினர்.

ஏராளமான பெண்களும்ஆண்களும் கலந்து கொண்ட இந்த மறியல் போராட்டம் காலை ஏழு மணி தொடக்கம் சுமார் பத்துமணிவரை நடைபெற்றது.

சில வங்கிக் கிளைகளின் கதவுகளுக்கு மேலதிகமாகப் பல பூட்டுக்கள் போடப்பட்டிருந்தன.

வெளியூர்களிலும் மக்கள் வங்கிகள்முன் நடந்த மறியல் போராட்டம் காரணமாக அவை மூடப்பட்டிருந்தன.

இன்றும் இரண்டாவது நாளாக சகல மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாகவும் மறியல் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

### யாழ்-கொழும்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கிறது.

கொள்ளைபோன பொருள்கள் பொதுமக்களுக்கு உரியவை. பல லட்சம் பெறுமதியானவை.

ஆயுதம் தாங்கிய-விடுதலைப் போராளிகள் எனத் தம்மை இனம் காட்டியோரே இக்கொள்ளையை நடத்தியிருக்கிறார்கள்.

இது தொடர்பாக ஒன்றியம் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் அவற்றின் விளைவுகளுக்கும் அவர்களே பொறுப்பாவார்கள்.

இப்படி ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது-

## பலாலி விமான நிலைய சுற்றுடலில் பதற்றம்

### மக்கள் பீதியால் வெளியேற்றம்

காங்கேசன்துறை, மார்ச் 18

பலாலி விமான நிலைய சுற்றுடலிலும், பலாலி, மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறை ஆகிய கரையோரப் பகுதிகளிலும் கடந்த சனிக்கிழமை முதல் மிகவும் பதற்றமானதோர் சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஏதோ பயங்கரம் நிகழப் போகின்றது என்ற அச்சத்தில் மக்கள் வெளியேறி வருகின்றனர்

இப்பகுதிகளில் வாழ்ந்த பல ஆயிரம் குடும்பங்கள் தமது வீடு, வாசல்களையும், உடைமைகளையும், தொழில்களையும் விட்டு ஆதரவற்ற நிலையில் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்.

வெளியேறும் குடும்பங்கள் மூடை முடிச்சுக்கள், குழந்தைகள் சகிதம் கால் நடையாகவும், வாகனங்களிலும் காங்கேசன் துறை வீதி மாவிட்டபுரம் வீதி ஆகியவற்றால் செல்வது பரிதாபத்திற்குரியதோர் காட்சியாக உள்ளது.

இப் பகுதிகளில் அடிக்கடி வேட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணம் உள்ளன.

## பொலிஸ் அலுவலகம் இடம்மாற்றம்

கொழும்பு, மார்ச் 18

மட்டக்களப்புப் பகுதியில் இதுகாலவரை இயங்கி வந்த பிரதி பொலீஸ் மா அதிபர் அலுவலகம் பதுளைக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 2 ஊர்காவல் வீரர் சுட்டுக் கொலை

### கன்னியாவில் சம்பவம்

திருகோணமலை, மார்ச் 18

திருகோணமலை, கன்னியாக் கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இரண்டு ஊர்காவல் படையினர் துப்பாக்கிச் சூடு தாக்கி மரணமானார்கள்.

போராளிகள் காட்டுக்குள் இருந்து சுட்டதில் இருவரும் இறந்தார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இறந்த இரண்டுபேரும் மிகுந்துபுர வாசிகள். பெயர்கள் வருமாறு;

1. லலித் சில்வா, வயது 17
2. றாபன் பெரேரா, வயது 20

மரண விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது

## கடற்கண்ணி வெடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் பீதியடைந்த மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்தனர்.

ஊர்காவற்றுறையில் உள்ள அரச அலுவலகங்களும் தனியார் வர்த்தக ஸ்தாபனங்களும் மூடப்பட்டன. கடை வீதிகள் சனப் புழக்கம் அற்றுக் காணப்பட்டன

ஒரு மணித்தியாலத் தாக்குதலுக்குப் பின்னர் கடற்படையினர் தங்களது பீரங்கித் தாக்குதல்களை நிறுத்திக்கொண்டனர்.

பீரங்கித் தாக்குதலால் ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு என்ற இடத்தில் இரண்டு இளம் பெண்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவம் பற்றிச் சொல்லப்படுவதாவது:

கண்ணிவெடி இருப்பது குறித்துத் தகவல் அறிந்த கடற்படையினர் இரண்டு பிளாஸ்ரிக் படகுகளில் அவ்விடத்தை நோக்கிச் சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனராம்.

அப்பொழுது நண்பகல் சுமார் ஒரு மணியளவில் திடீரென கண்ணிவெடி ஒன்று பயங்கர சத்தத்துடன் வெடித்ததாகக் கூறப்படுகிறது.

படகுகளில் சென்றோருக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றிய விவரம் தெரியவில்லை என்றும் சொல்லப்பட்டது.

இதனையடுத்து கடற்படை முகாமிலிருந்த கடற்படையினர் ஊர்மனைப் பகுதிகளை நோக்கி ஷெல் குண்டுகளை ஏவினர்.

இக்குண்டுகளில் ஒன்று பருத்தியடைப்பில் உள்ள ஒரு வீட்டிற்கு பின்னால் விழுந்து வெடித்ததனால் அங்கிருந்த பாலச்சந்திரன் இந்திரா (வயது 22) என்ற இளம்பெண் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டுள்ளது.

மற்றொரு பெண்ணும் காயமடைந்து ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என அறியவந்தது.

## சடலங்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரியில் இறந்து போனோரின் சடலங்களை பரிசோதனை செய்விப்பதற்கு சாவகச்சேரிசென்றுதான் டாக்டர்களை அழைத்து வரவேண்டியுள்ளது. சில வேளைகளில் அங்கு சென்று டாக்டர் இல்லாமலே திரும்ப வேண்டியும் உள்ளது.

பிரேத பரிசோதனை செய்வதற்கு வைத்திய அதிகாரியை உடன் அனுப்பி வைக்குமாறு சுகாதார சேவை பிராந்திய பணிப்பாளருக்கு அவசர செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது.

## அழைப்பை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதில் அனுப்பியுள்ளது.

யாழ் அரச அதிபர் மூலம் இப்பதில் அனுப்பப்பட்டது.

பதிலில் பின்வரும் மூன்று அம்சங்களை பிரசைகள் குழு வலியுறுத்தி உள்ளதாக அறியவருகிறது.

● கண்காணிப்புக் குழு யாழ்ப்பாணம் வரும்போது உயிர், உடைமைகளைப் பாதிக்கும் சம்பவங்கள்தான் இடம்பெறுகின்றன.

பாதிக்கப்பட்ட சம்பவங்கள் பற்றி விசாரணைக்கு வரும்போது மேலும் பாதிப்புக்கள் தான் ஏற்படுகின்றன

● கண்காணிப்புக்குழு ஒரு விசாரணைக் குழு பாதிக்கப்பட்ட இடங்களை குழு நேரில் சென்று பார்வையிடவேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் பயம் காரணமாக சாட்சியமளிக்கத் தயங்குகின்றார்கள். அவர்களிடம் நேரில் சென்று கண்காணிப்புக் குழுவிசாரிக்க வேண்டும்.

● அரசுவெளிப்படையாகவே விமானத் தாக்குதலை நடத்துகின்றது. இதனால் உயிர், உடைமைகள் அழிக்கப்படுகின்றன.

இந்த நிலையில் கண்காணிப்புக்குழு முன்சாட்சியமளித்து நேரத்தை வீணாக்க விரும்பவில்லை

சாட்சியமளிப்பதன் மூலம் ஏதும் பிரயோசனம் ஏற்படும் என்று பிரசைகள் குழு கருதவில்லை.

## ஆயுதப்படை முகாம் விஸ்தரிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 18

மட்டக்களப்பு, சந்திவெளியில் உள்ள ஆயுதப் படை முகாம் விஸ்தரிக்கப்பட்டது.

இந்த முகாம் தனியார் அரிசி ஆலையில் நிறுவப்பட்டுள்ளது.

முகாம் விஸ்தரிப்புக்காக இன்னொரு தனியார் அரிசி ஆலையும் சுவீகரிக்கப்பட்டது.

## அமெரிக்கா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு விருப்பமில்லை.

இதனாலேயே சிக்கலும் தடங்கலும் ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இந்த அஞ்சல் நிலையத்தை நிறுவுவது தொடர்பாக வொய்ஸ் ஒப் அமெரிக்காவிற்கும் இலங்கை அரசிற்கும் இடையில் 1983 இல் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்த இங்கு வந்த அமெரிக்கப் பிரதிநிதிகள் மூவர்

இடப் பிரச்சினை காரணமாக முடிவு எதுவும் இல்லாமல் அவசர அவசரமாகத் திரும்பினர்.

பரந்தன் ரயில் விபத்து

## இரண்டாவது சடலமும் அடையாளம் காணப்பட்டது

கிளிநொச்சி, மார்ச் 18

கடந்த சனிக்கிழமை பரந்தன் ரயில் விபத்தில் சிக்குண்டு மரணமான இரண்டாவது நபர் நியூட்டன் ஜெயராசா [வயது 26] என்று அடையாளம் காணப்பட்டது இவர் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மற்றொருவரது சடலம் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுவிட்டது.

## முகாமிலிருந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம்பியான கதிர்காமநாதன் மதியழகன் மூர்ச்சித்து விழுந்தான். உடனடியாக முதலுதவி அளிக்கப்பட்டு மயக்கம் தெளிவிக்கப்பட்டது.

இறந்த பாலமுருகன் குடும்பத்தில் மூத்த பிள்ளை. தந்தை ஒரு நோயாளி பாலமுருகனும் மதியழகனும் கண்ணுடித் தொழிற்சாலையில் வேலை செய்து தான் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தனர்.

இப்போது பாலமுருகன் இறந்து விட்டான். இனி நோயாளியான மதியழகன் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்

## தமிழக பட்ஜெட்

சென்னை, மார்ச்.17

12 கோடி 24 லட்சம் ரூபா துண்டு விழும் வரவு செலவுத் திட்டம் ஒன்றை நேற்று தமிழ் நாடு நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் சட்ட சபையில் சமர்ப்பித்தார்.

கற்கண்டு, சர்க்கரை, மாவு உட்பட 11பொருள்களுக்கு விற்பனை வரிச் சலுகை வழங்கும் திட்டமும் அறிவிக்கப்பட்டது

## விளையாட்டரங்கு

## குருநகர் பாடும் மீன் அணி இறுதி ஆட்டத்திற்குத் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ் உதைபந்தாட்ட லீக் நடத்தி வரும் - 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான-நொக் அவுட்' உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் விளையாடும் தகுதியை குருநகர் பாடும் மீன் அணி பெற்றுக் கொண்டது-

நேற்று முன் தினம் நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் பாடும் மீன் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது

இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென் நிக்கலஸ் விளையாட்டுக்கழக அணியை 6க்கு 4 என்ற கோல் அடிப்படையில் பாடும் மீன் அணி தோற்கடித்தது.

பெருந்திரளான உதைபந்தாட்ட ரசிகர்களின் மத்தியில் ஆரம்பமான ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

ஆட்ட நேர முடிவில் ஒன்றுக்கொன்று சளைக்காமல் ஆடிய இரு அணிகளும் தலா [illegible] கோல்களைப் போட்டிருந்தன.

இதனால் இந்த ஆட்டத்திற்கு மேலதிக பத்து நிமிட நேரம் வழங்கப்பட்டது

மேலதிக நேர ஆட்டத்திலும் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டு மீண்டும் கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தின.

இந்த ஆட்டம் எந்த அணிக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததனால் பனல்டி உதைகள் மூலம் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட்டது.

சென். நிக்கலஸ் அணி கொடுக்கப்பட்ட 4 பனல்டி உதைகளில் ஒரு கோலை மட்டும் போட்டது

பாடும் மீன் அணி தனக்கு கொடுக்கப்பட்ட 4 பனல்டி உதைகளில் 3 கோல்களைப் போட்டு ஆட்டத்தில் வெற்றியீட்டியது

இந்த ஆட்டத்திற்கு மத்தியஸ்தராக எம். தேவதாஸ் கடமையாற்றினார்.

கோண்டாவில் குமரன் விளையாட்டு மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன

இறுதியாட்டத்தில் பாடும் மீன் அணி, பொற்பதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மோதும் இந்த ஆட்டம் நாளை நடைபெறும்.

### விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 18

கிளிநொச்சி வேரவில் இந்து தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நாளை நடைபெறும்.

நாளை மாலை 2 - 00 மணிக்கு வேரவில் கிராம முன்னேற்ற சங்க மைதானத்தில் ஆரம்பமாகும் இந்த நிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி வட்டாரக் கல்வி அதிகாரி ஜனாப் எஸ் ஏ. சி. எம். இருனூ கலந்து கொள்வார்

சிறப்பு விருந்தினராக இரணைதீவு வலைப்பாடு பங்குத்தந்தை வண. பிதா பி. கொன்ஸலஸ் கலந்து கொள்வார்.

## இலங்கையர் சிக்கினரா?

கொழும்பு, மார்ச் 18

சிங்கப்பூரில் இடிந்து விழுந்த 6 மாடி ஹோட்டலின் இடிபாடுகளுள் இலங்கையரும் சிக்கியுள்ளார்களா?

இதுபற்றி அறிவதில் இலங்கை வெளிவிவகார அமைச்சு ஈடுபட்டுள்ளது.

சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதர் திரு. எம். பாலசுப்பிரமணியத்துடன் அமைச்சு அதிகாரிகள் தொடர்பு கொண்டுள்ளனர்.

## அ'புரம் திரும்பிய சிப்பாய்கள்

கொழும்பு, மார்ச் 18

கிளிநொச்சி, மாங்குளம், வவுனியா ஆகிய இடங்களில் உள்ள முகாம்களைச் சேர்ந்த சிப்பாய்கள் பெருமளவில் அனுராதபுரத்துக்கு நேற்றுத் திரும்பினர்.

பஸ்களில் பொதுமக்களோடு கலந்துகொண்டு பிரயாணஞ் செய்ததை காணக்கூடியதாக இருந்தது.

வட்டக்கச்சி சம்பவம்

## பிரஜைகள் குழுவிடம் உறவினர் முறையீடு

கிளிநொச்சி, மார்ச்.18

கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டக்கச்சி இரண்டாம் வாய்க்கால் பகுதியில் சிருடையினரின் தேடுதலின்போது கைது செய்யப்பட்டவர்களை தேடிக்கண்டுபிடித்து விடுதலை செய்து தருமாறு கோரி அவர்களது உறவினர்கள் கண்ணீர் மல்க கிளிநொச்சி பிரஜைகள் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

கூலி வேலை செய்யும் அப்பாவித் தொழிலாளர்களே கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் எட்டுப் பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இருபது பேர்வரை கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர்களுள் ஒருவர் விசுவமடுவைச் சேர்ந்த சுந்தரம் சண்முகநாதன்(வயது26) ஏனையோரின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

## மீனவர் மீது சூடு!

திருகோணமலை, மார்ச் 18

திருகோணமலைக் கடலில் மீன் பிடித்துக் கொண்டு இருந்த மீன் பிடிப் படகு ஒன்று மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

படகு சேதம் அடைந்தது. இரண்டு சிங்கள மீனவர்கள் காயங்கள் இன்றித் தப்பினர்.

மார்ச் 15ஆம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றது. கெவுளி முனையில் இருந்து போராளிகள் படகுமேல் சுட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

## தமிழ் அகதிகளுக்கு கச்சதீவில் ஏற்பட்ட பயங்கரம்!

ராமேஸ்வரம்,மார்ச் 17

இலங்கை திரும்பிய தமிழ் அகதிகளுக்கு கச்சதீவில் வைத்து நடந்த பயங்கரத்தை தமிழ்நாடு மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு. வி. இராமசாமி அண்மையில் வெளியிட்டார்.

கச்சதீவில் வைத்து இலங்கைக் கடற்படைச் சிப்பாய்கள் சுட்டதில் இரண்டு அகதிகள் இறந்தனர்.

ஏனையோரை இந்தியக் கரையோரக் கப்பலைச் சேர்ந்த ஹெலிக்கொப்டர் ஒன்று காப்பாற்றி இந்தியக் கரைக்குக் கொண்டு வரவேண்டியதாயிற்று -இப்படிஅமைச்சர் திரு. இராமசாமி சொன்னார்.

அகதிகள் சென்றபடகு இயந்திரக் கோளாறுகாரணமாகவே கச்சதீவை அடைந்தது. கச்சதீவில் இறங்கிய சமயம் அங்கு நின்ற கடற்படைச் சிப்பாய்கள் அகதிகளைநோக்கிச் சுட்டனர். அதில் 2 அகதிகள் மரணமானார்கள். இதன் காரணமாகத்தான் தமிழ்நாடு அதிகாரிகள் படகுகளைத் திருப்பிக் கொடுக்கவில்லை.

இப்படி அமைச்சர் திரு. இராமசாமி மேலும் சொன்னார்.

## தங்க கடத்தல் அகப்பட்டது

கொழும்பு, மார்ச் 18

பம்பாய்க்கு தங்கம் கடத்திச் செல்ல முயற்சித்த ஒரு முஸ்லிம் வர்த்தகர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கையும் மெய்யுமாக அகப்பட்டுக்கொண்டார்.

அவரிடமிருந்து 350 கிறும் தங்கம் கைப்பற்றப்பட்டது

விசாரணைக்காக அந்த நபர் தடுத்து வைக்கப்பட்டார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ்... எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 18-03-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ60/NJ86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org